வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 66/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 4 |
| நாள் | : | 10.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதீப் என்கின்ற பிரதாப் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் பிகாம் படித்து ஐடி நிறுவனத்தில் பணிபுரிகிறேன். அசா 3 முறுகேசன் எனது பெரியப்பா. ஆஜர் முதல் எதிரிக்கும் எனது சித்தப்பா மகேந்திரனுக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்தது. கடந்த 08.07.2020 மாலை 6 லிருந்து 7 மணிக்குள் எனது பெரியப்பா முறுகேசன் சித்தப்பா மகேந்திரனை முதல் எதிரியும் அவரது கூட்டாளிகளும் அண்ணம் கடையில் வெட்டிவிட்டதாகவும் காரை எடுத்துக்கொண்டு வரும்படியும் கூறினார். அந்த கடை இருக்கும் பகுதியில் தான் எனது சித்தப்பா மகேந்திரன் வசிக்கிறார். ஆம்புலன்சுக்கு தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் வராத காரணத்தினால் காரை எடுத்துக்கொண்டு வரும்படியும் கூறினார்கள். எனது சித்தப்பா மகேந்திரன் டிராவல்ஸ் காரை எடுத்துக்கொண்டு 7மணிக்குள் சம்பவயிடம் வந்தேன். எனது சித்தப்பா மகேந்திரன் கழுத்திலும் உடம்பிலும் வெட்டுபட்டு நிலையில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். நான் மற்றும் எனது பெரியப்பா முருகேசன் மற்றும் கடை உரிமையாளர் சுந்தரேசன் அவரை காரில் படுக்க வைத்து மருத்துவமனைக்கு அழைத்துவந்தோம். நான் வாகனத்தை ஓட்டினேன். எனக்கு பக்கத்தில் சுந்தரேசன் அமர்ந்திருந்தார். பின் இருக்கையில் முருகேசன் மடியில் சித்தப்பா மகேந்திரன் படுக்க வைத்து அழைத்து வ்ந்தோம். மருத்துவமனையில்

அவரை பரிசோதித்து வரும் வழிலேயே அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். இரவு 10 மணிவரை அங்கே இருந்தோம். சவகிடங்கில் பிரேதத்தை வைத்துவிட்டார்கள். மறுநாள் தான் பிரேதபரிசோதனை செய்வோம் என்று எங்களை அனுப்பிவிட்டார்கள். நாங்கள் சம்பவயிடம் வந்தோம் அங்கே கூட்டமாக இருந்தது. போலீசார்களும் அங்கே இருந்தார்கள். போலீசார்கள் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

முருகேசன் சித்தப்பா மகேந்திரனை வெட்டியதை பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை. சவகிடங்கில் வைத்ததிற்கு ரசீது எதுவும் நாங்கள் வாங்கவில்லை. இரவு 10.30 திருநின்றவூர் வந்தோம். வந்தசமயத்தில் அண்ணம் கடை பாதி திறக்கப்பட்ட நிலையில் இருந்தது. முருகன் என்று மாமா உறவு முறையில் இருக்கிறார். முருகேசனின் மனைவியின் தம்பி முருகன் ஆவார். நான் போகும்போது அவர்கள் கடையில் இருந்தார்கள். முருகவேல் என்று உறவுகாரர் உள்ளார். திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு 08.07.2020 அன்று முருகவேல் வந்தார். அசா 3 முருகேசன் பில்டிங்கான்டிராக் தொழில் செய்கிறார். முருகேசன் வண்டி மட்டும் கொண்டு வரும்படி பதற்றத்தில் கூறினார். வேறு எதுவும் சொல்லவில்லை. காரில ் செல்லும்போது முருகேசன் தமிழ் கடையிலிருந்து வெளியே வந்ததாக கூறினார். வேறு யாரும் சம்பவத்தில் பார்த்ததாக கூறவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. நான் மற்றும் முருகேசன் காயம்பட்ட மகேந்திரனை தூக்கினோம் என்றால் சரிதான். எங்களது இருவரது உடையிலும் இரத்த கரை படிந்தது என்றால் சரிதான். இரத்த கரை படிந்த எங்களது ஆடைகளை போலீசார் வாங்கவில்லை.

மறுவிசாரணை - இல்லை

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 66/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 10.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் திருநின்றவூரில் வசிக்கிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். கடந்த 08.07.2020 அன்று எனது தம்பி மகேந்திரனை வெட்டி கொன்றுவிட்டார்கள். அவருக்கும் ஆஜர் முதல் எதிரி தமிழ்செல்வனுக்கும் இருந்த பிரச்சனை காரணமாக முதல் எதிரி தமிழ்செல்வன் மகேந்திரனை பீல்பாட்டிலால் அண்ணா நகரில் ஒரு வருடத்திற்கு முன்பு அடித்துவிட்டார். அதுதான் அவர்களுக்குள் முன்விரோதம். 8.07.2020 மாலை சுமார் 6.30 மணியளவில் செல்வராஜ் நகர் சாலையில் எனது தம்பி மகேந்திரனை 5 நபர்கள் வெட்டிவிட்டார்கள். நான் அந்த சமயத்தில் பக்கத்து தெருவில் வேலை செய்து கொண்டிருந்தேன். அலறல் சத்தம் கேட்டு வெளியே செல்வராஜ் சாலையில் அண்ணம் மளிகை கடையில் உள்ளே இருந்து தமிழ்செல்வம், அபிமன்யூ, மோகன் என்கின்ற கிஷோர், அதிஷ், தமிழ்மாறன் ஆகியோர் வெளியே ஓடிவந்தார்கள். கடைக்கு உள்ளே சென்று பார்த்தபோது எனது தம்பி மகேந்திரன் வெட்டு பட்டு இருந்தார். ஆம்புலன்சுக்கு தொடர்பு கொண்டேன் அவர்கள் வரவில்லை. எனவே தம்பி மகனான பிரதாப் என்பவரை கார் எடுத்துக்கொண்டு வர சொன்னேன். அவர் கார் எடுத்துக்கொண்டு வந்தார். நானும் , பிரதாப் மற்றும் மேற்படி கடை உரிமையாளராக சுந்தரேசன் என்பவரும் எனது தம்பி

மகேந்திரனை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம். மருத்துவமனையில் பரிசோதித்து அவர் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார். பிரேதத்தை சவகிடங்கில் வைத்துவிட்டு நாங்கள் சம்பவயிடத்திற்கு வ்ந்தோம். பிறகு 31.07.2020 அன்று புழல் சிறைக்கு எதிரிகளை அடையாளம் காட்ட அழைத்து சென்றார்கள். சிறைசாலைக்கு சென்ற நான் அடையாளம் காட்டினேன். நான்கு நபர்களை அடையாளம் காண்பித்தேன். எதிரிகள் 2 முதல் 5 மட்டும் அங்கே ஆஜரில் இருந்தார்கள். அவர்கள் மட்டும் அடையாளம் காட்டினேன். நான் சுந்தரேசன் மற்றும் அவரது மனைவி இராணி எதிரிகளை அடையாளம் காட்டினோம். போலீசார்கள் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் 1 முதல் 5க்காக**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்று போலீசார் கேட்கவில்லை. காவல் நிலையத்தில் முதல் எதிரி தமிழ்செல்வன் எனது தம்பியை அடித்தது குறித்து புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அதன்பிறகு அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். நான் கொத்தனார் வேலை செய்துகொண்டிருந்தபோது பக்கத்து தெருவில் இருந்து சம்பவயிடத்திற்கு ஓடி வந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சென்றபோது கடைக்குள்ளேயிருந்து எதிரிகள் வெளியே ஓடிவந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிகளின் பெயர்களை நான் அப்போது குறிப்பிட்டு சொல்லவில்லை. (எதிரிகளின் பெயர்களை முதல் கேள்வியில் வழக்கறிஞர் கேட்டபோது ஆமாம் என்று கூறிவிட்டு பிறகு பெயர்களை குறிப்பிட்டு கேட்டபோது பெயர்களை சொல்லவில்லை என்று சாட்சி கூறினார்) புழல் சிறைசாலையில் 2 முதல் 5 எதிரிகளை அடையாளம் காட்ட சொன்ன போது தான் அவர்கள் பெயர் எனக்கு தெரியும். எதிரிகளின் பெயர்களை குணசேகரன் ஆய்வாளர் சொன்னதை வைத்து கூறுகிறேன். சம்பவயிடத்திற்கு நான் ஓடி வந்து பார்த்தபோது போலீசார் அங்கே இல்லை. எனது தம்பி மகேந்திரனை காரில் ஏற்றியபோது 5 நிமிடம் கழித்து போலீசார் வந்தார்கள். போலீசார் நான் பார்த்தேன். அப்போது

போலீசாரிடம் நான் எந்த தகவலும் கொடுக்கவில்லை. காரில் ஏற்றி கொண்டு வந்துவிட்டோம். பில்டிங்கான்டராக் செய்வதாக போலீசாரிடம் சொன்னேன். என்னிடம் நான்கு நபர்கள் வேலை செய்வதாக சொன்னேன். நான் தனியாக கான்டிராக் பேசி வேலை கொடுப்பேன். எனது மூத்த அண்ணன் பெயர் ரவி. இரண்டாவது அண்ணன் பெயர் சம்பத், அடுத்து தம்பி பெயர் சங்கர், அடுத்தவர் பெயர் மகேந்திரன். நான் வேலை முடித்து செல்வராஜ் மெயின் ரோடு வழியாக 8.07.2020 மாலை 6.30 மணிக்கு வந்து கொண்டிருந்தபோது சம்பவம் நடந்ததாக போலீசார் விசாரனையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஓடிவந்தேன். நடந்துவந்ததாக அல்லது ஓடிவந்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரிகள் எனது தம்பியை கடைக்குள் வெட்டியதை நான் பார்த்தேன். 5 நபர்கள் வெட்டியதை நான் பார்க்கவில்லை. நான்கு நபர்களிடம் மட்டும் கத்தி இருந்ததை பார்த்தேன். கிழக்கு பக்கமாக ஓடினார்கள். எந்த திசையில் ஓடினார்கள் என்று போலீசார் கேட்கவில்லை எனவே நான் சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் ஒன்றாம் எதிரி பெயரை தமிழ் என்று மட்டும் தான் கூறினேன். தமிழின் தகப்பனார் பெயரை போலீசார் விசாரணையில் சொன்னேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி தமிழ் எந்த உடை அணிந்திருந்தார் என்ற நான் கவணிக்கவில்லை. மற்ற எதிரிகள் என்ன உடை அணிந்திருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. 2முதல் 5 எதிரிகளை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் அதுபோல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தம்பி மகன் ஸ்விப்ட் கார் எடுத்து வந்ததாக சொன்னே் .அதன் பதிவு எண் சொல்லவில்லை. நான் கைபேசி மூலமாக எனது தம்பி மகனுக்கு தகவல் சொன்னேன். எப்படி தகவல் சொன்ன விவரத்தை போலீசார் கேட்கவில்லை எனவே சொல்லவில்லை. வரும்வழிலேயே எனது தம்பி இறந்துவிட்டதாக மருத்துவர் பரிசோதித்து கூறியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரேதத்தை சவகிடங்கில் வைத்துவிட்டார்கள். அதற்கு ஒப்புகை ரசீது எதுவும்

கொடுக்கவில்லை. திருநின்றவூர் போலீசார் ரசீது எதுவும் வாங்கவில்லை. எனது அண்ணன் ரவிக்கு தகவல் சொன்னதாக போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் வேலை செய்த முருகன் த/பெ ராமசாமி வயது 49, ராஜீவ் காந்தி தெரு, திருநின்றவூர் என்பவரை தெரியும். வேலை மூலமாக எனக்கு பழக்கம், அவர் எனது நண்பர். மறுநாள் மதியம் 1 மணிக்கு பிரேதம் வீட்டிற்கு வந்தது. நான் போய் பிரேதத்தை வாங்கவில்லை எனது அண்ணன் போய் வாங்கினார். பிரேதம் வீட்டிற்கு வந்த சமயத்தில் முருகன் எங்கள் வீட்டு அருகே இருந்தாரா என்று கவனிக்கவில்லை. எனது தம்பி இறந்த விவரம் மேற்படி முருகனுக்கு தெரியும். வாசுதேவன் த/பெ நரசிம்மன், வயது 22/2020 எண் 20, 12டி, குறுக்கு தெரு, லட்சமண புறம், திருநின்றவூர் என்பவர் இந்த வழக்கில் சாட்சியாக உள்ள பிரதீப் என்பவரின் நண்பர் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து எனது தம்பியை அழைத்து செல்ல கார் 6.40 க்கு வந்தது. பிரதீப் மற்றும் ரவியிடம் எதிரிகள் எனது தம்பியை வெட்டி கொன்றது பார்த்தாக கூறினேன். இந்த விவரத்தை போலீசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையிலிருந்து சம்பவயிடத்திற்கு இரவு 10 மணிக்கு வந்தேன். அப்போது போலீசார் அங்கே இருந்தார்கள். அப்போது ான் காவல் நிலையத்திற்கு சென்று புகாரோ அல்லது புகார் வாக்குமூலமோ கொடுக்கவில்லை. புகார்தாரர் ராணி மற்றும் சுந்தரேசன் கடையில் ' இல்லாதபோது எனது தம்பி கடை வியாபாரம் பார்ப்பார் என்றால் சரிதான். கடந்த 08.07.2020 மாலை எனது தம்பி அதுபோல் கடை வியாபாரத்தை பார்த்துகொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் கடைக்குள் புகுந்து எனது தம்பியை வெட்டி விட்டார்கள் என்றாலும் ராணி மற்றும் சுந்தரேசன் இந்த தகவலை என்னிடம் போன் மூலமாக சொன்னார்கள் என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்தேன். மறுநாள் காவல் நிலையம் சென்று எதிரிகளை பிடிக்கவில்லையா என்று போலீசாரை நாங்கள் கேட்டோம் என்றால் நான் போகவில்லை மற்றவர்கள் கேட்டுயிருப்பார்கள். இந்த விவரம் நான் கேள்விபட்டேன். சொந்த அண்ணனாக இருந்தபோதும் பதற்றத்தில்

நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. மறுநாள் எதிரிகளை பிடித்துவிட்டதாக கைபேசியில் வீடியோ கால் மூலம் எங்களது உறவினருக்கு ஆய்வாளர் எதிரிகளை காண்பித்தார் என்றால் நான் பார்க்கவில்லை. புகார் கொடுக்கும்போது நான் உடன் செல்லவில்லை. போலீசார் என்னை அழைக்காததால் நான் புகார் கொடுக்கவில்லை. நான் சம்பவம் சமயத்தில் ஊரில் இல்லை என்றாலும் அதன் காரணமாக தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் எதிரி தமிழ்செல்வனிடம் நான் பேசி பழகியது கிடையாது. 31.07.2020 அன்று ஆய்வாளர் பாபு என்கின்ற போலிசாரும் சிறைசாலைக்கு என்னுடன் வந்தார்கள். போலீசார் வாகனத்தில் ஒன்றாக சென்றோம். எதிரிகள் கடையிலிருந்து வெளியே வந்தபோது ஒரளவிற்கு அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். பிறகு போட்டா காண்பித்தார்கள். அடையாளம் தெரியாத நபர்கள் எனது தம்பியை கொலை செய்துவிட்டார்கள் என்றாலும் ஏற்கனவே நடந்த சம்பவத்தின் காரணமாக போலீசாரை வற்புறுத்தி முதல் எதிரி மீதும் மற்ற எதிரிகள் மீதும் ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்ய செய்தோம் என்றால் சரியல்ல. எப்போது எதிரிகளை கைது செய்தார்கள் என்கின்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரிகளை கைது செய்துவிட்டதாகவும் பிரேதத்தை எடுத்து செல்லும்படியும் போலீசார் எங்களிடம் சொன்னார்கள் என்றால் அது மற்றவர்களிடம் சொல்லியிருப்பார்கள் என்னிடம் சொல்லவில்லை. எதிரிகளை கைது செய்த விவரம் போட்டோவுடன் பேப்பரில் போடபப்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் பார்த்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை